Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 311

சனிக்கிழமை
04 ஒக்ரோபர் 2025

புரட்டாதி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## எரிகாயங்களுடன் ஆசிரியர் ஒருவர் சடலமாக மீட்பு!

கிளிநொச்சி, ஒக். 4
கிளிநொச்சி - பெரிய பரந்தன் பகுதியில் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில், ஆசிரியர் ஒருவர் சடலமாக 11

## காதல் விவகாரத்தில் இளைஞருக்கு வெட்டு

### ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு யாழ்.போதனாவில் தீவிர சிகிச்சை

முல்லைத்தீவு, ஒக். 4
முல்லைத்தீவு – முத்துஐயன்கட்டுப் பகுதியில் இளைஞர் ஒருவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். 11



எந்தத் தாமதமும் இன்றி

## மாகாணத் தேர்தலை உடன் நடத்துங்கள்!

### முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய வலியுறுத்து

கொழும்பு, ஒக். 4
மாகாண சபைகளுக்குரிய தேர்தலை இவ் வருடத்துக்குள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார். 11

மன்னாரில் பயங்கரம்

## பொலிஸாரின் தடுப்புக் காவலில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!

### அடித்துத் துன்புறுத்தியதால் இறப்பு என்று இளைஞரின் தாயார் பரபரப்புக் குற்றச்சாட்டு

மன்னார், ஒக. 4
போதைப்பொருளுடன் தொடர்புடைய வழக்கில், மன்னார் பேசாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.
இந்த விடயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலை 11

## பிரபல பாடசாலையொன்றில் ஆசிரியரால் கோரத் தாக்குதல் மாணவன் மருத்துவமனையில்!

யாழ்ப்பாணம், ஒக். 4
யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்கு அருகாகவுள்ள பிரபல பாடசாலையொன்றில், ஆசிரியரால் கோரமாகத் தாக்கப்பட்ட மாணவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.
முழந்தாளில் இருத்திவைத்து அந்த மாணவன் மீது தாக்குதல் நடத்தப்பட்ட 11

## நிறைவேற்று அதிகாரம் நீக்கப்படவே கூடாதாம்!

### முன்னாள் நீதியமைச்சர் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 4
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தற்போது நீக்கப்படக் கூடாது. இது தொடர்பில் அரசிடம் கோரிக்கை முன்வைக்கின்றேன் என்று முன்னாள் நீதி அமைச்சர் 11

## தாஜூதீன் விவகாரத்தில் நாமல் பதறுவது ஏன்?

விரிவு பக்கம்:- 02


## குறிகாட்டுவான் இறங்குதுறைக்கான அபிவிருத்திப் பணி இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக். 4
யாழ்ப்பாணம் – குறிகாட்டுவான் இறங்குதுறைக்கான அபிவிருத்திப் பணிகள் துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் பிமல் ரத்நாயக்கவால் இன்று ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.
299 மில்லியன் ரூபா 11

இயக்கச்சியில்

## வெடிக்காத நிலையில் மேலும் பல குண்டுகள்

கிளிநொச்சி, ஒக். 4
கிளிநொச்சி இயக்கச்சியில் உள்ள தனியார் காணியில் வெடிக்காத நிலையில் நேற்றுப் பல குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.
தனியார் காணியொன்றின் 11



## இலங்கையின் கோரிக்கைப்படியே பிரேரணையில் சொற்கள் மாற்றம்

### பிரிட்டன் விளக்கம்

கொழும்பு, ஒக். 4
இலங்கை அரசாங்கத்தினதும், இலங்கைக்கு ஆதரவான ஏனைய சில நாடுகளின் வேண்டுகோளுக்கு அமைவாகவுமே இலங்கைக்கு எதிரான பிரேரணையில் சொற்கள் மாற்றப்பட்டன என்று பிரிட்டன் அறிவித்துள்ளது.
ஐக்கிய நாடுகள் மனித 11



## திலீபனின் அஞ்சலி நிகழ்வுக்காக புதிய நினைவேந்தல் கட்டமைப்பு

### தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே. அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4
தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை மேற்கொள்வதற்காக, அரசியல் பேதங்கள் மற்றும் தலையீடுகள் இல்லாத புதியதொரு நினைவேந்தல்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றுவடமாகாணஅவைத் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அண்மைக் 11



யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில்

## 50 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், பணமும் திருட்டு!

சந்தேகநபர் கைது விரிவு பக்:- 11

முச்சந்தி முரளி

'அப்ப பிரேரணையில என்னென்ன சொல்லு வரோணும் எண்டு இவையின்ர சொல்வழி கேட்டுத்தான் அவையள் நடக்கினமோ?'

மக்கள் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 03.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4213 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 34 40 68 75 |
| விசேட எழுத்து | D |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 03.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1280 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 30 42 60 62 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 03.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0239 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 3 3 5 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 03.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2319 |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 17 |
| வெற்றி இலக்கங்கள் | 16 52 64 69 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 03.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5971 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 3 8 3 8 4 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 03.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2001 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 32 40 50 82 |
| விசேட எழுத்து | N |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 03.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0087 |
| வெற்றி இலக்கினம் | விருட்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 22 32 45 |

# பொருளாதாரம், தொழில்நுட்பம் வளர்ச்சி பாலின சமத்துவத்தை உறுதிசெய்யாது!

## அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஒக்.4**

**பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம் போன்றவை மட்டும் பாலின சமத்துவத்தை உறுதிசெய்யாது. உதாரணமாக இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போர் முடிந்தபின் பெண்களுக்கு வழங்கப்பட்ட நுண் கடன்கள் கடும் சுமைகளை ஏற்படுத்தின. பலர் உயிர்மாய்ப்புக்குத் தள்ளப்பட்டனர்.**

இவ்வாறு இலங்கையில் தெற்காசியப் பெண்களுக்கான ஊடக அமைப்பின் 16ஆவது ஆண்டு நிறைவுவிழாவில் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சட்டங்கள், கொள்கைகள், திட்டங்கள் பெண்களை ஒதுக்கி அமைதியாக்குகின்றன. சமூக ஊடகம் போன்ற கருவிகள் பெண்களுக்கு எதிரான வன்முறையை நிலைநாட்டுவதற்கும், பெண்களைப் பொதுவாழ்க்கை, தொழில், வீட்டைக் கடந்து பொது விருப்பங்களைச் செய்வதைத் தடுக்கத் தூண்டுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 2023 அறிக்கையுடன் ஒப்பிடுகையில், உலகளாவிய ரீதியில் 74.8 கோடி பேர் பராமரிப்புப் பொறுப்புகள் காரணமாக வேலைவாய்ப்பில் ஈடுபடவில்லை. அதில் 70.8 கோடி பெண்களும், வெறுமனே 4 கோடி ஆண்களும் அடங்குகின்றனர். பெண்கள் குழந்தைப் பராமரிப்பு, விசேட தேவையுடையவர்கள் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு, வீட்டுப்பணி போன்றவற்றில் அசாதாரண அளவில் சுமையைக் கொண்டிருப்பதைக் காட்டுகின்றது.

சமூகத்தில் ஆண்களுக்கு வன்முறை, ஆணவம், ஆதிக்கம் ஆகியவை பயிற்றுவிக்கப்படுகின்றன. பெண்களை சம உரிமையுள்ள மனிதர்களாகப் பார்க்க மறுப்பதே, பெண்களை ஒரு பொருளாகக் கருதும் மனப்போக்கையும், பாலியல் வன்முறையையும் உருவாக்குகிறது. பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம் போன்றவை மட்டும் பாலின சமத்துவத்தை உறுதிசெய்யாது. ஏனெனில் அவை தற்போதைய சமத்துவமின்மைகளைப் புதிய வடிவில் மீண்டும் உருவாக்கும். பெண்கள் வன்முறைகளை எதிர்கொள்ளும்போதுகூட, சமூக எதிர்பார்ப்புகள் அவர்களை "சமூகத்துக்கேற்ப நடந்துகொள்ளவேண்டும்" என நிர்ப்பந்திக்கின்றன. இவற்றை மாற்றியமைப்பதற்கு உகந்த வழிமுறைகள் கையாளப்படவேண்டும்- என்றார். (ச-க-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | 03.10.2025 | |
| தினம் | வெள்ளிக்கிழமை | |
| வெற்றி வாரம் | 0679 | |
| ஆங்கில எழுத்து | T | |
| வெற்றி இலக்கம் | 3 6 6 1 9 0 | |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 03.10.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2945 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 10 33 49 56 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 03.10.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 05 41 46 74 |
| வெற்றி வாரம் | 5006 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 03.10.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0783 |
| வெற்றி இலக்கம் | 25 30 43 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 03.10.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| கன்னி | |
| வெற்றி இலக்கம் | 13 40 42 46 |
| சீட்டிழுப்பு வாரம் | 4657 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 03.10.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | W |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கம் | 06 11 30 34 |
| வெற்றி வாரம் | 2121 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 03.10.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 22 30 48 72 |
| வெற்றி வாரம் | 2771 |



# சர்ச்சைகளாலேயே தாஜுதீன் விவகாரம்

## ஐ.ம.சக்தி தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.4

அரசாங்கம் தொடர்பில் அண்மையில் எழுந்த சர்ச்சைகளை மறைப்பதற்காக வசீம் தாஜுதீன் விவகாரம் கையிலெடுக்கப்பட்டுள்ளது. இவற்றை விடுத்து நியாயமான விசாரணைகளை முன்னெடுத்து தாஜுதீனுடைய மரணத்துக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாஜுதீன் கொலை தொடர்பில் விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்படுவது சிறந்ததாகும். ஆனால் தற்போது இடம்பெறுவது விசாரணைகள் அல்ல, அரசாங்கம் தொடர்பில் அண்மையில் எழுந்த சர்ச்சைகளை மறைப்பதற்கான பரப்புரையே . இவற்றை விடுத்து நியாயமான விசாரணைகளை முன்னெடுத்து தாஜுதீனுடைய மரணத்துக்கு நீதி வழங்கப்படவேண்டும். இந்த ஓராண்டுக்குள் அரசாங்கத்தின் இயலாமையை மக்கள் நன்கு உணர்ந்துகொண்டுள்ளனர் - என்றார். (ச-இ)

# தாஜுதீன் விவகாரத்தில் நாமல் பதறுவது ஏன்?

## ஆளுங்கட்சி கேள்வி



கொழும்பு, செப்.4

றக்பி வீரர் வசீம் தாஜுதின் மரணம் தொடர்பில் புதிய விடயங்கள் வெளியாகும் போது நாமல் ராஜபக்ச ஏன் கலக்கமடையவேண்டும்? கலக்கமடையவேண்டாம், பதறவேண்டாம் உண்மை வெளிவரும் என்று அவருக்குக் கூறிக் கொள்கின்றோம் என்று தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

றக்பி வீரர் வசீம் தாஜுதின் மரணத்துக்கும் ராஜபக்ச குடும்பத்துக்கும் இடையில் தொடர்புண்டு என்று கடந்த காலங்களில் வெளிப்படையாகவே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இந்த விவகாரம் குறித்து தற்போது முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த கால ஊழல் மோசடிகள், படுகொலைகள் தொடர்பில் முறையான விசாரணைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு நாமல் ராஜபக்ச கலக்கமடையத் தேவையில்லை. சட்டத்தைக் கடுமையாகச் செயற்படுத்தும் போது ஊழல்வாதிகள் அதை அடக்குமுறை என்று கூறுவதை நாம் பெரிதுபடுத்தப்போவதில்லை- என்றார். (ச-இ)




# சர்வதேசக் கடன் தரப்படுத்தல் இலங்கை முன்னேற்றம்!

## பிட்ச் ரேடிங்ஸ் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.4

சர்வதேச கடன் தரப்படுத்தல் நிறுவனமான பிட்ச் ரேடிங்ஸ் நிறுவனம் இலங்கையின் நிதி நிலைமையை ஆராய்ந்து கடன் தரப்படுத்தல் பட்டியலில் இலங்கையைத் தரமுயர்த்தியுள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டிருந்தாலும், நாட்டின் அரச கடன் இன்னும் உயர்மட்டத்திலேயே இருக்கின்றது. மின்சாரம் தொடர்பில் நடைமுறைக்குச் சாத்தியமான கட்டண கணக்கிடுதல் போன்ற சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளில் ஓரளவு முன்னேற்றத்தை அடைந்துள்ளதாகவும் குறிப்பி ப்பட்டுள்ளது. இலங்கை தொடர்ச்சியான பொருளாதர மறுசீரமைப்புக் காரணமாக பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையின் அடிப்படையில் பொருளாதாரம் இயல்புநிலைக்குத் திரும்புவதாக வும் குறைந்த பணவீக்கமும் அந்நிய செலாவணியில் அதிகரிப்பும் காண்பிப்பதாகவும் பிட்சி ரேடிங்ஸ் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய ஒழுக்கங்களை மீறுவது சமூகத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தும்

## மூன்று பீடங்களின் மகாநாயக்கர்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, ஒக்.4

ஒரு நாட்டின் கலாசார அடையாளம், வரலாற்றுப் பாரம்பரியம் மற்றும் பாரம்பரிய ஒழுக்கங்கள் புறக்கணிக்கப்பட்டு, குறுகிய தன்னிச்சையான மற்றும் குருட்டுத்தனமான போலித்தனத்தின் அடிப்படையில் அரசை நிர்வகிக்க முயற்சித்தால், அது நாட்டில் அராஜகத்துக்கும், முழு சமூகத்தின் வீழ்ச்சிக்கும் வழிவகுக்கும் என்று மூன்று பீடங் களைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தால் உடல் ரீதியான தண்டனையை குற்றமாக்குவதற்கு முன்மொழியப்பட்ட தண்டனைச் சட்டத்தின் 82ஆவது பிரிவில் திருத்தம் செய்வதும், ஓரினச்சேர்க்கையை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு சுற்றுலா மேம்பாட்டு ஆணைக்குழு ஆதரவளிப்பதும் இத்தகைய கடுமையான ஒழுக்க அராஜகத்துக்கும் பல சமூக நெருக்கடிகளுக்கும் காரணங்களாகும் என்று தேரர்கள் தங்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(எ-இ)




## சிறுமி துஷ்பிரயோகம்; 32 வருடங்கள் சிறை!

திருகோணமலை,ஒக்.4

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 16 வயதுக்குட்பட்ட சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிக்கு 32 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை திருகோணமலை மேல் நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் வழக்கு விசாரணை இடம்பெற்றுவந்த நிலையில் சந்தேகநபர் மீதான குற்றச்சாட்டுகள் விசாரணையின்போது உறுதி செய்யப்பட்டதையடுத்துத் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் குற்றவாளிக்கு 60 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டதுடன் அபராதத்தைத் செலுத்தத்தவறும் பட்சத்தில் மேலும் இரு வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (க-இ)



யாழ்.வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபராக பா.பாஸ்கரன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமைகளை நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றார். அவர் இதற்குமுன் யாழ்ப்பாணம் குட்டியப்புலம் அ.த.க.பாடசாலையில் அதிபராகப் பணிபுரிந்தார். (ச)

## பிளாஸ்ரிக் போத்தல்களுக்கு தரச்சான்றிதழ் கட்டாயம்



கொழும்பு, ஒக்.4

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல், மீண்டும் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் குழந்தைகளுக்கான பால் குடிக்கும் போத்தல்கள் அனைத்தும் இலங்கை தரநிலை சான்றிதழைக் கொண்டிருப்பது கட்டாயம் என நுகர்வோர் விவகார ஆணையகம் தெரிவித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியின்படி, உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வர்த்தகர்கள் தரநிலைகளைப் பூர்த்திசெய்யாவிட்டால் மற்றும் அதிகாரபூர்வச் சான்றிதழ் அடையாளத்தைக் காட்டாவிட்டால், அத்தகைய போத்தல்களை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், கொண்டு செல்வது, சேமித்து வைப்பது அல்லது விற்பனை செய்வதற்குத் தடைவிதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



### நவாலியில்

## வெற்றுக்காணியிலிருந்து துப்பாக்கி ரவைகள் மீட்பு

யாழ்ப்பாணம்,ஒக்.4

மானிப்பாய்ப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவாலி வடக்குப் பகுதியிலுள்ள காணியொன்றின் மலசலகூடக் குழியிலிருந்து பெருமளவான துப்பாக்கி ரவைகள் கண்டறியப்பட்டுள்ளன.

நீண்டகாலம் பராமரிப்பின்றிக் காணப்பட்ட காணியைக் காணியின் உரிமையாளர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை துப்புரவு செய்தபோதே பெரும் தொகையான துப்பாக்கி ரவைகள் காணப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் உடனடியாக மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து காணியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்[illegible] ரவைகளை [illegible] ([illegible])




## கமெராவும் இடமாற்றமும்

தென்மராட்சி வலயத்தில இருக்கிற ஒரு கலவன் பள்ளிக்கூடப் பிள்ளையள் போனமாதம் ரூர் போனவை. கண்டி, நுவரெலியா எண்டு ரண்டுநாள் அந்த இடங்களை எல்லாம் சுத்திப்பார்த்திட்டு வந்திருக்கினம். ஒரு பிள்ளைக்கு 5, 500 ரூபாப்படி வாங்கித்தான் ரூருக்கு பள்ளிக்கூடக்காரர் கூட்டிக்கொண்டு போயிருக்கினம். பஸ்காசு, தங்குமிடம், சாப்பாடு எல்லாம் அந்த ஐயாயிரத்து ஐநூறு ரூபாவுக்குள்ளதான் அடக்கம். பிள்ளையளுக்கும் ரூர் எண்டால் கொண்டாட்டம்தானே. அதால ஆறாம் ஆண்டில இருந்து ஓ.எல். வகுப்பு வரை கனபிள்ளையள் போயிருக்கினம்.

அப்பிடி நுவரெலியாவுக்குப் போன அந்தப் பள்ளிக்கூடக்காரர், அண்டைக்கு இரவு அங்க இருக்கிற ஒரு கோயிலில தான் தங்கியிருக்கினம். பள்ளிக்கூட ரூர் எண்டால் எல்லாரும் யூனிபோர்மிலதான் போயிருப்பினம். அதோட அங்க குளிர் வேற. அதால போனவுடன எல்லாரும் உடுப்பு மாத்தோணும். ஆனால் அங்கதான் சிக்கல். கோயில் எண்டதால மண்டபமும், ரண்டு மூண்டு அறையளும்தான் இருந்திருக்கு. ஆனால் அந்த மண்டபத்திலையும், அறையளுக்குள்ளையும் சிசிரிவி கமெரா இருந்திருக்கு. பெடியளுக்குக் கமெரா இருந்தாலென்ன, இல்லாட்டியென்ன எண்டு நினைச்சு சடார் புடாரெண்டு அவங்கள் உடுப்பை மாத்திக்கொண்டு வந்திட்டாங்கள். ஆனால் பொம்பிளைப் பிள்ளையள் சிலர் இப்பிடிக் கமெராவுக்கு முன்னால என்னெண்டு உடுப்பு மாத்திறது எண்டு வெக்கப்பட்டுக்கொண்டு இருந்திருக்கினம். இப்பிடி பொம்பிளைப் பிள்ளையள் உடுப்பை மாத்தாமல் நிக்கிறதைக் கண்டிட்டு சில ரீச்சர்மார் என்ன விசயம் எண்டு கேக்க, பிள்ளையள் மண்டபத்திலையும், அறையளிலையும் கமெரா இருக்கெண்டு சொல்லியிருக்கினம். "இதெல்லாம் ஒரு பிரச்சினையோ? நீங்கள் மாத்துங்கோ" எண்டு ரீச்சர்மார் சொல்லியிருக்கினம். அதால வேற வழியில்லாமல் பிள்ளையள் கமெரா இருக்கிற இடங்களிலதான் உடுப்பை மாத்தவேண்டியதாப் போட்டுது.

அந்தப் பிள்ளையளுக்கு "இப்பிடிக் கமெராவுக்கு முன்னால உடுப்பு மாத்தினால் ஏதும் பிரச்சினையள் வருமோ?" எண்ட பயம் மட்டும் ரூரால வந்த பிறகும் போகேலை. அதால சில பிள்ளையள் மெல்ல மெல்ல வீட்டுக்காரருக்கும் இந்த விசயத்தை சொல்லியிருக்கினம். உந்தக் கதை பள்ளிக்கூடத்திலையும் பரவ வெளிக்கிட்டுது. அதால "என்னெண்டு கமெரா இருக்கிற இடத்தில பொம்பிளைப் பிள்ளையளை உடுப்பு மாத்த வைப்பியள் எண்டு ஒரு மாஸ்டர் மட்டும் பள்ளிக்கூடத்தில பிரின்சிப்பலோட கொஞ்சம் குரலை உயர்த்திக் கதைச்சிருக்கிறார். இப்ப என்னடா வெண்டால், அப்பிடி நியாயம் கேக்கப்போன மாஸ்ரரை அந்தப் பள்ளிக்கூடத்தில இருந்து உடனடியா இடமாற்றம் செய்யிறதுக்கு அலுவல் நடந்துகொண்டிருக்காம். என்ன விசயம் எண்டு சொல்லாமல், கன பெற்றாரிட்ட சைன் வாங்கி, அவரை இடம்மாத்தோணும் எண்டு பள்ளிக் கூடத்தால கடிதம் அனுப்பப்பட்டிருக்காம். அதுக்குப் பிறகுதான் அந்த மாஸ்ரரை இடமாற்றம் செய்யத்தான் தங்களிட்ட சைன் வாங்கியிருக்கினம் எண்ட விசயம் பெற்றாருக்குத் தெரிய வந்திருக்கு. இப்ப பெற்றார் எல்லாரும் நடந்த சம்பவத்தை விலாவாரியா எழுதி, அந்த மாஸ்ரருக்கு அநீதி செய்யவேண்டாம் எண்டு வலயத்துக்கு மறுத்தான் கடிதம் ஒண்டு அனுப்பி இருக்கினமாம். இப்ப நல்லதுக்குக் காலமில்லை கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்
(ராசிபலன்)

**மேடம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதக மாகும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற் பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். பிள்ளை களை அனுசரித்துச் செல்லவும்.

**மிதுனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனு கூலமாகமுடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத் தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவி னர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு வார்த்தை சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர் பார்த்த பணம் இன்று கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத் தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவு ரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டுநீங்கும். பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு உங்கள் மன அமைதியை பாதிக்க வாய்ப்பு உள்ளது என்பதால் அவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணைமூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பேசும்போது பொறுமை அவசியம்.

**மகரம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். உறவினர்களுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டி ருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்புக்குறையும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற் றுவீர்கள்.

**மீனம்:** கணவன் மனைவிக்கிடையே மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.




# வெள்ளப்பள்ளம் குளக்காணியில் பெருமளவு மரங்கள் வெட்டிச்சாய்ப்பு

முல்லைத்தீவு,ஒக்.4

புதுக்குடியிருப்பு உடையார்கட்டு வெள் ளப்பள்ளம் குளக்காணியிலிருந்த பெருமளவு மரங்கள் சட்டவிரோதமாக வெட்டி அழிக்கப்பட்டுள்ளன. வெள் ளப்பள்ளம் குளத்தின் அருகிலுள்ள ஒருங்கிணைந்த பண்ணையின் உரி மையாளரால் அவை சட்டவிரோதமாக வெட்டப்பட்டுள்ளன. இவர் குளத்துக்கு ரித்தான காணிகளை ஆக்கிரமித்துள் ளார் என்று கிராம மக்களால் நாடாளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகர னுக்குத் தெரியப்படுத்தப்பட்டநிலையில் அவர் குளக்காணியை நேரில் சென்று பார்வையிட்டார். சட்டவிரோதமாக மரங் களை வெட்டியவர்களுக்கெதிராக விரைந்து நடவடிக்கைகளை எடுக்கு மாறு வெள்ளப்பள்ளம் கிராம அலுவ லர், உடையார்கட்டு கமநல அபிவி ருத்தி உத்தியோகத்தர் மற்றும் புதுக்கு டியிருப்புப் பிரதேச செயலர் ஆகியோரி டம் கோரிக்கை விடுத்தார். (சு-246)

யாழ். போதனா மருத் துவமனையின் விடுதி இலக்கம் 11 இல் சிறு வர்தின நிகழ்வுகள் கடந்த சிறப்பாகக் நடைபெற்றன. இதில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த சிறார்கள் உற்சாகமாக விளையாட்டுகளில் கலந்துகொண்டு தமது மகிழ்வை வெளிப்படுத் தினர். (ச25, 66)




# நூல் வெளியீடும் அறிமுக விழாவும்

யாழ்ப்பாணம், ஒக்.4

எழுத்தாளரும் கல்வி மேம்பாட்டாளருமான மயூர தனால் எழுதப்பட்ட 'மனிதன் புனிதனாக வேண் டும்' எனும் சிறுகதைத்தொகுதி நூல் வெளியீடும் அறிமுக விழாவும் சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர் பொ.குகதாசன் தலைமையில் இன்று சனிக்கிழமை காலை 8.30மணிக்கு நாவற்குழிப் பிரதேசசபை உப அலுவலகத்தில் அமைந்துள்ள கந்தையா கனகம்மா நினைவாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் அறிமுகவுரையை கந்தையா கனகம்மா நிதியத்தின் காப்பாளர் க.மயில்வாகனமும், வாழ்த் துரையை சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன் னாள் தவிசாளர் சி.துரைராசாவும், வெளியீட்டு ரையை யாழ்.பல்கலைக்கழக மாணவி கஜானி நகுலேஸ்வரனும், ஆய்வுரையை சாவகச்சேரிப் பிரதேசசபையின் ஓய்வுபெற்ற செயலாளர் வே.சிவராஜலிங்கமும், மதிப்பீட்டுரைகளை சாவ கச்சேரிப் பிரதேச செயலாளர் த.சுதர்சனும், சாவ கச்சேரி உப தவிசாளர் இ.யோகீஸ்வரனும், நாவற் குழி பொதுநூலக நூலகர் வி.பிரபாகரனும் நிகழ்த் துவர்.

இதன்போது கைதடி நாவற்குழி அ.த.க. பாட சாலை மாணவர்களின் இசை ஆரம்ப நிகழ்வும் இடம்பெறவுள்ளதுடன் பிரதிகள் வழங்கலும் இடம் பெறும். (ச41-131)



# வாத்திய நாத சங்கமம்

யாழ்ப்பாணம், ஒக்.4

மாயோன் இசைக்கல்லூரியின் வாத்திய நாத சங்கமம் நிகழ்வு சாவகச்சேரி, சிவன்கோவிலடி கலாசார மண்டபத்தில் நாளைஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள் ளது.

இசை ஆற்றுகை நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழு அறி வித்துள்ளது. (சு-25.9)

# மகிடா சூரவதம்!

யாழ்ப்பாணம், ஒக்.4

நவராத்திரி விழாவின் மகிடா சூரவதம் கடந்த புதன்கிழமை வல்வெட்டித்துறையில் சிறப்பாக இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து வீதியுலாவாகப் புறப்பட்ட முத்துமாரியம்மன் நெடியகாடுப் பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்ததைத் தொடர்ந்து மகிடா சூரவதம் இடம்பெற்றது.

இதன்போது முத்துமாரியம்மன் வீதியுலா வந்த வீதியெங் கும் தண்ணீர் தெளித்து மண்டபப்படிகள் வைத்து மக்கள் வழிபட்டிருந்ததுடன் பெருமளவான மக்கள் மகிடாசூரனை வதம் செய்யும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். (ச-41-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# வலியுணர்ந்தவர்களே வதைக்கலாமா?

செப்ரெம்பர் மாதத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்று அறிவித்திருந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், அந்த அறிவிப்பில் இருந்து முற்றுமுழுதாகப் பின்வாங்கியிருக்கின்றது. செப்ரெம்பர் மாதம் நிறைவடைந்தநிலையில், இதுவரை பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவும் இல்லை. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிவித்தல் எதையும் அரசாங்கம் வெளியிடவுமில்லை. தற்போது அரசாங்கத்தில் உள்ளவர்கள், ஆயுதக்குழுக்களாக இருந்த போது இதே பயங்கரவாதத் தடைச்சட்டம் அவர்களைத் தாறுமாறாக வேட்டையாடியது. இந்தச் சட்டத்தின் வலி உணர்ந்தவர்கள் என்பதால்தான், அநுர தரப்பினர் அந்தச்சட்டத்தைத் தூக்கிக் கடாசுவார்கள் என்ற எதிர்பார்ப்பு பரவலாக இருக்கவே செய்தது. ஆனால், ஒட்டுமொத்த மக்களுக்கும் எஞ்சியது என்னமோ ஏமாற்றம்தான்.

வாக்குறுதி ஒன்றை வழங்கிவிட்டு அதை நிறைவேற்றாமல் விடுவது அநுர அரசாங்கத்துக்குப் புதிதல்ல. வடக்கில் படையினரிடம் உள்ள காணிகள் விடுவிக்கப்படும் என்றார்கள். ஆனால், பலாலி வீதியில் பகுதியளவான போக்குவரத்துடன் ஏமாற்றினார்கள். தையிட்டி திஸ்ஸ விகாரைக்குத் தீர்வு வழங்கப்படும் என்றார்கள். தற்போது மருந்துக்கும் அது தொடர்பான பேச்சுகள் எடுபடுவதாயில்லை. மன்னாரில், மக்களின் விருப்பத்துக்கு மாறாக எந்தத் திட்டமும் கொண்டுவரப்படாது என்றார்கள், ஆனால், பொலிஸ் அராஜகத்தைப் பயன்படுத்தி இன்று காற்றாலைகள் அமைக்கப்பட்டுவருகின்றன. அத்துமீறிய மீன்பிடி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றார்கள், இரு தினங்களுக்கு முன்னரும் பருத்தித்துறை மீனவர்களின் வலைகள் இந்திய இழுவைப் படகுகளால் அழிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு நீதி வழங்கப்படும் என்றார்கள். இன்றளவும் கத்தோலிக்க திருச்சபை காத்துத்தான் கிடக்கின்றது. இந்த நீண்ட பட்டியலில் மற்றொரு உதாரணம்தான் பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்ற வாக்குறுதியை அரசாங்கங்கள் வழங்குவது இதுவொன்றும் முதல்முறையல்ல. விரல்விட்டு எண்ணிவிடமுடியாத அளவுக்கு, பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான கருத்தாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால், காலவரையறையொன்றை நிர்ணயித்து, அந்தக் காலப் பகுதிக்குள் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்ற வாக்குறுதி வழங்கப்பட்டது இதுவே முதல்முறை. ஆதலால்தான் இந்த விடயத்தில் பெரியளவில் கவனக்குவிவுகள் ஏற்பட்டன. ஆனால், முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய சொன்னதைப் போன்று, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையையும், இலங்கைக்கு வரிச் சலுகைகள் மூலம் படியளக்கும் ஐரோப்பியர்களையும் ஏமாற்றவே 'செப்ரெம்பருக்குள் நீக்கம்' என்ற சொற்பதத்தை அரசாங்கம் பயன்படுத்தியதே அன்றி, இதுவொரு இதயசுத்தியான அறிவிப்பல்ல என்பது இப்போது தெளிவு. பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் ராஜபக்சக்கள் பாதிக்கப்படவில்லை, விக்கிரமசிங்கக்கள் பாதிக்கப்படவில்லை, பிரேமதாஸக்கள் பாதிக்கப்படவில்லை, பண்டாரநாயக்காக்கள் பாதிக்கப்படவில்லை. தேசிய மக்கள் சக்தியினர் மட்டுமே நேரடிப் பாதிப்பை மிகையாக எதிர்கொண்டனர். ஆக, வலியை உணர்ந்தும் அந்த வலியின் மூலகாரணத்தை அப்புறப்படுத்தாமல் வைத்திருக்க முடிகின்றது என்றால், தற்போதைய அரசாங்கத்தினர் இதுவரை இருந்த ஆட்சியாளர்களையும்விட மோசமானவர்கள் என்றே அர்த்தம்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



**நாளொரு நல்வார்த்தை**

வளையும் முதுகு பாரத்தை சுமக்கும்,
வளையும் மனம் எதிரியையும் எதிர்த்து நிற்கும்
வல்லமையையும் பெறும்.

--மாண்டெயின்--




## இலங்கையில் புற்றுநோயாளர்கள் நாளுக்குநாள் உயர்வு

கொழும்பு,ஒக்.4

**இலங்கையில் வருடந்தோறும் புற்றுநோயளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகின்றது. வருடா வருடம் எமது கிளினிக்குகளில் 2 ஆயிரத்து 500 முதல் மூவாயிரம் பேர் புதிதாக இணைந்துகொள்கின்றனர் என்று கண்டி தேசிய மருத்துவமனைப் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் இரேசா பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், அன்றாட வாழ்க்கைமுறைகளில் மாற்றங்கள் ஏற்படாத வரையில், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வது சிரமமாகும்.

தற்போது புற்றுநோயால் பாதிப்படைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டுவருகின்றது. இது எமது சுகாதாரத்துறை எதிர்கொள்ளும் பெரும் சவாலாகும். இதற்குச் சிகிச்சைகளைவிட நோய்வராது பாதுகாத்துக்கொள்ள எமது வாழ்கைமுறையில் மாற்றங்கள் தேவை.

நாம் உண்ணும் உணவு உட்பட அன்றாட வாழ்க்கையில் மாற்றங்கள் தேவை-என்றார். (க-இ)



## மனுஷவின் பிணைமனு 8ஆம் திகதி விசாரணை

கொழும்பு,ஒக்.4

இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவால் கைதுசெய்யப்படுவதற்கு முன் பிணை கோரி முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 8ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் போது விவசாய வேலைகளுக்காக இஸ்ரேலுக்கு தொழிலாளர்களை அனுப்பியதாகக் கூறப்படும் முறைகேடு குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ச-இ)

## கொழும்பு கட்டுநாயக்க விமானசேவை ஆரம்பம்

கொழும்பு,ஒக்.4

பேர ஏரியை நீர் விமானநிலையமாகப் பயன்படுத்தி கட்டுநாயக்கவுக்கும் கொழும்புக்கும் இடையிலான விமானசேவை நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

உள்நாட்டு விமானப்பயணத்தை விரிவுபடுத்துவதற்கும் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தச்சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் முன்பு 2011-2012ஆம் ஆண்டில் நீர் சார்ந்த 'ஜலதாரா' விமானங்களைத் தொடங்கியது. ஆனால் பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்தச் சேவை இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ஹைஏஸ் விபத்தில் ஒருவர் பலி; 6 பேர் படுகாயம்

கொழும்பு,ஒக்.4

மொனராகல தனமல்விலவெல்லவாய வீதியில் ஹைஏஸ் ஒன்று வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஆறு பேர் காயமடைந்துள்ளனர். நேற்று அதிகாலை இடம் பெற்ற இந்த விபத்தில் ஹைஏஸின் சாரதி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## கைவிடப்பட்ட நிலையில் பெண் குழந்தை மீட்பு!

கொழும்பு,ஒக்.4

இபலோகமவின் கொன்வேவா பகுதியில் நேற்றுமுன்தினம் ஒரு மாதப் பெண் குழந்தையொன்று பையில் கைவிடப்பட்டநிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற குடும்ப சுகாதார அதிகாரி ஒருவரின் வீட்டின் முன்பாகவுள்ள நாற்காலியில் குழந்தை வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. குழந்தைநிகவெரட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு குழந்தை நல்ல நிலையில் இருப்பதாக மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர். (ச-இ)

**நாளை** ஞாயிற்றுக்கிழமை - புரட்டாதி 19
05.10.2025
சுபநேரம் : 09.02 - 10.32
ராகுகாலம் : 04.32 - 06.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராமரிப்பு நடவடிக்கைகளால் யாழ்தேவி நேரத்தில் மாற்றம்

**கொழும்பு, ஒக்.4**

**வடக்கு ரயில் பாதையில் வவுனியா மற்றும் ஓமந்தை இடையே மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய பராமரிப்புப் பணிகள் காரணமாக யாழ்தேவி ரயில் தாமதமாக இயக்கப்படும் என ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது. எதிர்வரும் 7ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை இது நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

கொழும்புக் கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கு இயக்கப்படும் யாழ்தேவி கடுகதி ரயில் கொழும்புக் கோட்டையிலிருந்து திட்டமிட்ட நேரத்தில் (காலை 06.40) பயணத்தை ஆரம்பித்து, வவுனியா (வவுனியாவில் முற்பகல் 11.35) வரை உரிய நேரத்தில் இயக்கப்பட்டு வவுனியா ரயில் நிலையத்தில் 2 மணி நேரம் 40 நிமிடங்கள் நிறுத்தப்பட்டு பின்னர், வவுனியா ரயில் நிலையத்தில் இருந்து பிற்பகல் 2.15க்கு காங்கேசன்துறை நோக்கி இயக்கப்படும்.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக் கோட்டைக்கு இயக்கப்படும் யாழ்தேவி கடுகதி ரயில், காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து 30 நிமிடங்கள் தாமதமாகி முற்பகல் 11 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும்.

கொழும்புக் கோட்டையிலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணிக்கும் யாழ்தேவி கடுகதி ரயில் (இலக்கம் 4077 ரயில்) வவுனியாவுக்கு அப்பால் காங்கேசன்துறைவரை முன்பதிவு செய்த பயணிகளுக்கு, வவுனியா ரயில் நிலையத்தில் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக ரயில் நிறுத்தப்பட்டு பயணிப்பதால், தாம் முன்பதிவு செய்த பயணச்சீட்டை இரத்து செய்யவேண்டுமானால் பயணச்சீட்டை இரத்துச் செய்து முழுத் தொகையையும் மீளப்பெறும் வசதி, முன்பதிவு செய்யும் வசதியுள்ள ரயில் நிலையங்கள் ஊடாக மேற்கொள்ளமுடியும் என ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ-இ)

## நேருக்குநேர் மோதி கவிழ்ந்த டிப்பர்கள்

கிளிநொச்சி,ஒக்.4

எதிரெதிராகப் பயணித்த இரு டிப்பர்கள் மோதுண்டு தண்டவாளத்தில் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளன.

ஏ-9 வீதியின் முகமாலை வேம்படு கேணி ரயில் கடவைக்கு அண்மித்த பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து நடந்துள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த பேருந்து, மக்களை இறக்குவதற்கு குறித்த பகுதியில் நின்றபோது, அதனை டிப்பர் முந்திச் செல்ல முற்பட்டபோது எதிரே வந்த டிப்பருடன் மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது. தண்டவாளத்தில் தடம்புரண்ட டிப்பர்கள் ஜே.சி.பி. வாகனம்மூலம் அகற்றப்பட்டன. டிப்பர்களின் சாரதிகள் காயங்களுடன் பளை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பாக பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (க-113,9)



## இயற்கையை நேசிப்பதை இளமையிலேயே கற்கவும்

### மாணவர்களுக்கு ஆளுநர் அறிவுரை

முல்லைத்தீவு,ஒக்.4


பாடசாலை மாணவர்கள் இளமையிலேயே இயற்கையை நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் அடுத்த தலைமுறையிடம் இதனைக் கையளிக்கும் பொறுப்பும் உங்களுக்குரியது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

'இயற்கையான கற்றல் களம்' கருத்திட்டத்தின் வடக்கு மாகாண ரீதியான நிகழ்வு, முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தூய்மை இலங்கை செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது. இதற்காக 50 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இன்றைய காலத்தில் இயற்கையை நாம் வகைதொகையின்றி அழித்துவருகின்றோம். நாம் அவ்வாறு செய்வதன் விளைவுகளையும் உடனுக்கு உடனேயே எதிர்கொள்கின்றோம். காலநிலை மாற்றம் என்பது இன்று உலகளாவிய ரீதியில் மிகப்பெரிய சவாலாகிக்கொண்டு போகின்றது. நாமும் எப்போது மழை வரும் என்பதைக் கணிக்க முடியாத நிலையில் இருக்கின்றோம். இதனால் விவசாயத்திலும் பாதிப்பு ஏற்படுகின்றது. இதனைக் கருத்திலெடுத்தே அரசாங்கம் பாடசாலை மாணவர்களிடத்தில் இயற்கையைப் பாதுகாக்கும் திட்டத்தை ஒப்படைத்துள்ளது.

பச்சை வலயங்களை உருவாக்கவேண்டியது மாணவர்களாகிய உங்களின் பொறுப்பு. நாங்கள் அழித்த இயற்கையை மீளுருவாக்கம் செய்யவேண்டும்- என்றார். (க-113)

## யாழ்ப்பாண மாவட்டத்தின் பண்பாட்டுப் பெருவிழா!



யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ். மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. யாழ். புனித யுவானியர் தேவாலய முன்றிலில் இருந்து கலாசார ஊர்வலம் ஆரம்பமாகி மாவட்டச் செயலகத்தினை வந்தடைந்ததனைத் தொடர்ந்து மாவட்டச் செயலகம் கேட்போர் கூடத்தில் பண்பாட்டுப் பெருவிழா நடைபெற்றது. இதன்போது பல்வேறு கலாசார நிகழ்வுகள், சாதனையாளர் கௌரவிப்புகள் இடம்பெற்றன. (ச-25, 27)

## மாகாணசபைத் தேர்தலை விரைந்து நடத்துங்கள்!

### மனோ எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு,ஒக்.4

மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும். தேர்தல் முறைமை தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அன்று என்னுடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இடம்பிடித்திருந்தார். பழைய முறைமையின்கீழ் தேர்தலை நடத்துவதற்கு அன்று அவர் இணக்கம் வெளியிட்டிருந்தார். எனவே, மாகாணசபைத் தேர்தலை பழைய முறைமையில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

தேர்தல் முறைமைதான் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குத் தடையாகவுள்ளது. இதனை இலகுவில் சரிசெய்யலாம். நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணையை, அரசாங்கம் ஏற்று அதனை நிறைவேற்றி இதற்கு வழிசமைக்கவேண்டும்-எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டார். (ச-44)




## சாவகச்சேரி செயலகத்துக்கு புதிய உதவிப்பிரதேச செயலர்

யாழ்ப்பாணம்,ஒக்.4

சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தின் புதிய உதவிப் பிரதேச செயலராக திருமதி லாகினி நிருபராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நியமனக்கடிதத்தை, யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடமிருந்து நேற்றுமுன்தினம் பெற்றுக் கொண்டார். அன்றைய தினமே அவர், தனது கடமையையும் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவர் இதற்குமுன்னர்வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் அலகின் பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-66,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் வரிப்பண அபிவிருத்தியில் அரசியல் வியாபாரம் செய்யாதீர்!

## புதுக்குடியிருப்புப் பிரதேசசபைத் தவிசாளர் தேசிய மக்கள் சக்திக்கு சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஒக்.4**
**மக்களின் வரிப்பணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்ட நிகழ்வுகளின்போது ஏனைய மக்கள் பிரதிநிதிகளைத் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் அழைப்பதில்லை. மாறாக தேசிய மக்கள் சக்தியின் கட்சி சார்ந்தவர்களே அழைக்கப்படுகிறார்கள் என புதுக்குடியிருப்புப் பிரதேசசபைத் தவிசாளர் வே.கரிகாலன் தெரிவித்துள்ளார்.**

விசுவமடு கிழக்குப் பகுதியில் உள்ள அட்டைக்குளம் அபிவிருத்திக்கு இரண்டு மில்லியன் ரூபா பணத்திட்டத்தினை அரசாங்கம் மக்கள் வரிப்பணத்தில் இருந்து ஒதுக்கீடு செய்துள்ளது. அதற்கான முன்னாயத்தத் திட்டமிடல் கலந்துரையாடல் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெற்றபோதே அவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
வன்னியில் கிராமமட்டங்களில் நூற்றுக்கணக்கான வேலைத்திட்டங்கள் இடம்பெறுகின்றன.
வன்னி மாவட்டத்தில் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அதேபோல் பிரதேசசபை உறுப்பினர்கள் பலர் இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் அழைக்கப்படுவதில்லை. வேலைத்திட்டங்கள் நடைபெறும்போது தேசிய மக்கள் சக்தியின் கட்சி சார்ந்தவர்களே அழைக்கப்படுகின்றார்கள். இங்கு அரசியல் பரப்புரையோ அல்லது அரசியல் வியாபாரமோ இடம்பெறவில்லை-என்றார். (ச-19)

# சர்வதேச புத்தகக்கண்காட்சியில் புறக்கணிக்கப்படும் தமிழ்மொழி

## இலங்கை தமிழ்ப் புத்தகப் பதிப்பாளர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.4
கொழும்பில் தற்போது நடைபெற்றுவரும் சர்வதேச புத்தகக் கண்காட்சியில் தமிழ் மொழிக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை என இலங்கை தமிழ்ப் புத்தகப் பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.
கடந்த 26 ஆண்டுகளாக கொழும்பு புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டுவருகிறது. இலங்கை புத்தக வெளியீட்டாளர் சங்கத்தினால் நடத்தப்படும் இந்தக் கண்காட்சியில் சிங்களமொழி நூல்களுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் தமிழ்மொழி படைப்பாளர்கள், தமிழ்ப் பதிப்பாளர்கள், தமிழ் நுகர்வோர் பல்லாண்டுகளாக பெரும் பாரபட்சங்களுக்குள்ளாகி வருகின்றார்கள். அத்துடன் இவ்வாறான புத்தகக் கண்காட்சிகளில் தமிழ்பேசும் சிங்களப் பேசும் கலைஞர்களுக்கிடையிலான பிணைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. துரதிர்ஷ்ட வசமாக தமிழ்ப் படைப்பாளர்கள் போதியளவு புத்தகக்கடைகள் இல்லாததால் கலந்துகொள்வதில்லை.
இச்சங்கத்தின் இணையத்தளமும் அதன் பதிப்புகளும் கூட ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மட்டுமே உள்ளன. ஏற்பாட்டாளர்களில் தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் பிரதிநிதித்துவப்பட்டிருந்தால் குறைந்தபட்சம் அவர்களின் குரல்கள் அங்கே ஒலித்திருக்கும். குறைகள் அடையாளம் காணப்பட்டு நிவர்த்திசெய்யப்பட்டிருக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சிறுவர் தினமும் வாணி விழாவும்

யாழ்ப்பாணம்,ஒக்.4
இணுவில் பொதுநூலகச் சிறுவர் திறன்விருத்தி மைய மாணவர்களின் சிறுவர் தினமும் வாணி விழாவும் கடந்த புதன்கிழமை இணுவில் பொதுநூலகச் சிறுவர் திறன்விருத்தி மைய மண்டபத்தில் இணுவில் பொதுநூலகச் சிறுவர் திறன் விருத்தி மைய அதிபர் திருமதி.கமலராணி கிருஷ்ணபிள்ளை தலைமையில் சிறப்புற நடைபெற்றன.
நிகழ்வில் இணுவில் பொதுநூலக லண்டன் அமைப்புக் குழு அமைப்பாளர் இ.சிவகுமார் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டார். (ச-66)






# நல்லொழுக்க தினம் சங்கானையில் அனுஷ்டிப்பு

கொழும்பு,ஒக்.4
வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நல்லொழுக்க தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.
சங்கானையில் உள்ள அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் விருந்தினர்களாகக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.
இதன்போது பொருளாதாரம் நலிவுற்ற தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-27)

# கண்டித்த ஆசிரியர்மீது மாணவன் தாக்குதல்!

மொனராகலை,ஒக்.4
மொனராகலையில் உள்ள பாடசாலையொன்றில் ஆசிரியர் ஒருவர்மீது மாணவர் தாக்குதல் நடத்தியுள்ளார்.
தாக்குதலில் ஆசிரியர் காயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
க.பொ.த. சாதாரணதரத்தில் படிக்கும் மாணவர் ஒருவர் பாடசாலைக்குக் கையடக்கத் தொலைபேசி கொண்டுவந்தமை குறித்து கேள்வி எழுப்பியதால், மாணவர் ஆசிரியரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# திருகோணமலையில் கும்ப நகர்வலம்

திருகோணமலை, ஒக்.4
திருகோணமலையின் பாரம்பரிய அடையாளங்களில் ஒன்றும், நூற்றாண்டு பழமை மிகுந்ததுமான கும்ப நகர்வல நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
திருகோணமலைக்கே உரித்தான, தனித்துவமான கும்ப விழாவில் கடந்த 10 தினங்களாக பூசிக்கப்பட்டு வந்த கும்பகலசங்கள் உட்பட அதனோடு இணைந்த அலங்காரக் கும்பங்கள் அனைத்தும் வீதிகளில் எடுத்து வரப்பட்டு கும்பம் சொரிதல் சமுத்திரத்தில் நிறைவுபெற்றது. (ச)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 08 . 1940

மறைவு 30 . 09 . 2025

## பொன்னம்பலம் நீதிராஜா (நவரட்ணம்)

தாவடி தெற்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நீதிராஜா அவர்கள் கடந்த (30.09.2025) செவ்வாய்க்கிழமை விண்ணகமெய்தினார்.


அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும், இந்திராணி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரோஜினிதேவி அவர்களின் அன்புக் கணவரும், சுதா (UK), உசா (ஜேர்மனி), இந்திரன் (UK), அமுதா (ஜேர்மனி), இராசன் (UK), கேதா (UK), தேவகுமார் (வைத்தியர், யாழ்ப்பாணம்), சத்தியா (ஆசிரியர், ஏஞ்சல் சர்வதேச பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகநாதன், ராஜமோகன், நாகலோஜி, சுபாகரன், நவநீதரன், கிறிஸ்ரின், எலன்ரைன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரன், தர்சிகா, கருணியா, நவீன், வேணுஜா, அபிநயா, அஜயன், ஐஸ்வர்யா, அக்ஷியா, கேஷியா, வைஷானா, டிஷான், ஜேன், ஈதன், எமி, அபிஷா, அபிநாத் ஆகியோரின் பாசமிகு பேரனும், ரிஷ்வாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிஆராதனை நாளை (05.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடியில் அமைந்துள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/59564) J-1

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 . 01 . 1971

மறைவு 27 . 09 . 2023

## அமரர் கனகரத்தினம் சுபாஸ்கரன்

கண்ணுக்கு ஒளியாய் நெஞ்சத்தில்
நிலையாய் என்றும் எங்களோடு
எங்களின் இறைவனாய் என்றும்
எங்களை வழிநடத்த வணங்குகின்றோம்.
நீங்கா நினைவுகளுடன்...

இல. 54, கண்ணாபுரம்,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(CS/59556) J-1

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் பொன்னுத்துரை சோமசூரியசிங்கம்

(சிங்கம்ஸ் பார்மஸி உரிமையாளர்)

முப்பத்தொரு நாட்கள் உருண்டோடி மறைந்தாலும்,
எம் விழிகளை விட்டு உங்கள் நினைவுகள் அகலவில்லை
உங்கள் நினைவுகள் எம் இதயத்தில் என்றும் வாழும்,
ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.



எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், சமூகவலைத்தளங்கள் ஊடாகவும் எமக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர் வளையங்கள், மலர் மாலை சாத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பதாதைகள் மற்றும் அனைத்து வழிகளிலும் ஆறுதலாகவும், உதவியாகவும் இருந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம் 19.08.1941

மறைவு 02.09.2025

குடும்பத்தினர்

(CS/59550) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# யானை தாக்கி ஒருவர் பலி!

கொழும்பு,ஒக்.4
ஆனமடுவ, சியம்பலஸே் வெவ் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். தனது சகோதரனின் வீட்டுக்கு நடந்து சென்றுகொண்டிருந்தபோது யானை தாக்கத்துக்குள்ளாகியுள் ளார். சம்பவத்தில் உயிரிழந்தவர் 65 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ச-இ)

# பருத்தித்துறை - கேவில் பேருந்து நேற்றும் நடுவழியில் பழுதடைவு!

## இரவு வேளை பயணிகள் அந்தரிப்பு!

**யாழ்ப்பாணம், ஒக். 4**

**பருத்தித்துறை - கேவில் வழித்தடத்தில் பயணிக்கும் இ.போ.ச. பேருந்து நேற்று இரவு நடுவழியில் பழுதடைந்து நின்றதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். நேற்று மட்டும் இரண்டு தடவைகள் பேருந்து பழுதடைந்து நின்றுள்ளது.**

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலையால், வடமராட்சி கிழக்கிற்கான சேவையில் ஈடுபடுத்தப்படும் பழைய பேருந்தால் சேவைகள் அடிக்கடி தடைப்பட்டு வருகின்றன. இதனால் குறித்த வழித்தடத்தில் பயணம் மேற்கொள்ளும் மாணவர்கள், நோயாளர்கள், பொதுமக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

பேருந்து அடிக்கடி பழுதடைந்து இடைநடுவே நிற்பதால் வடமராட்சி கிழக்கில் இருந்து பருத்தித்துறையில் உள்ள பிரபல பாடசாலைகளுக்கு வரும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதன் தொடர்ச்சியாகவே நேற்றும் பேருந்து பழுதடைந்துள்ளது.

இதையடுத்து, வடமராட்சி கிழக்கு பகுதிச் சேவைக்காக புதியதொரு பேருந்தை வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் துறைசார் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பேருந்து அடிக்கடி பழுதடைந்து நடு வீதியில் நிற்பது தொடர்பில் கடந்த பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் சுட்டிக்காட்டப்பட்டபோது பருத்தித்துறை சாலை முகாமையாளர் அதனை மறுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-100)


# சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணம்

## பெறுகைகளுக்கான அழைப்பு

### உலர் உணவு மற்றும் சமைத்த உணவு வழங்கல் சேவை – 2025/2026

1. வடமாகாண சுதேசமருத்துவ திணைக்கள பெறுகைகள் குழுத்தலைவர், மாகாண சுதேசமருத்துவ திணைக்களத்தின் கீழ் இயங்கும் சித்த வைத்தியசாலைகளுக்கு தேவையான உலர் உணவு மற்றும் சமைத்த உணவு வழங்கல் சேவைக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை சேவையாளர்களிடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து கோருகின்றார்.

| தொ.இல | பெறுகை இல. | சேவைவிபரம் | கேள்விப் பிணைப்பணம் | |
|---|---|---|---|---|
| | | | தொகை (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| 01. | NP/22/02/FM09/Raw food/VAV/2025/2026 | உலர் உணவு வழங்கல் சேவை - 2025/2026 ஆதார சித்த வைத்தியசாலை. பம்பைமடு, வவுனியா | 60,000.00 | 15.01.2026 |
| 02. | NP/22/03/FM09/Cooked Food /JAF/2025/2026 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2025/2026 மாவட்ட சித்த வைத்தியசாலை. யாழ்ப்பாணம் | 15,000.00 | 15.01.2026 |
| 03. | NP/22/03/FM09/Cooked Food /KIL/2025/2026 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2025/2026 மாவட்ட சித்த வைத்தியசாலை. கிளிநொச்சி | 15,000.00 | 15.01.2026 |
| 04. | NP/22/03/FM09/Cooked Food /MAN/2025/2026 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2025/2026 மாவட்ட சித்த வைத்தியசாலை. மன்னார் | 15,000.00 | 15.01.2026 |
| 05. | NP/22/03/FM09/Cooked Food /MUL/2025/2026 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2025/2026 மாவட்ட சித்த வைத்தியசாலை. முல்லைத்தீவு | 15,000.00 | 15.01.2026 |
| 06. | NP/22/03/FM09/Cooked Food /PAN/2025/2026 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2025/2026 கிராமிய சித்த வைத்தியசாலை. பண்டத்தரிப்பு | 10,000.00 | 15.01.2026 |
| 07. | NP/22/03/FM09/Cooked Food /TELL/2025/2026 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2025/2026 கிராமிய சித்த வைத்தியசாலை. தெல்லிப்பளை | 10,000.00 | 15.01.2026 |
| 08. | NP/22/03/FM09/Cooked Food /KAR/2025/2026 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2025/2026 கிராமிய சித்த வைத்தியசாலை. கரவெட்டி | 10,000.00 | 15.01.2026 |
| 09. | NP/22/03/FM09/Cooked Food /KOD/2025/2026 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2025/2026 கிராமிய சித்த வைத்தியசாலை. கொடிகாமம் | 10,000.00 | 15.01.2026 |

2. உலர் உணவு மற்றும் சமைத்த உணவு விநியோகத்திற்கான விலைக்கேள்விதாரர்கள் வலுவான வியாபார பதிவுச்சான்றிதழை கொண்டிருக்கின்ற ஒரு தனிநபராகவோ அல்லது தனிப்பட்ட நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும். மேலும் குறித்த நிறுவனமானது வடமாகாணத்தில் நிறுவனத்தினையோ அல்லது பதிவு செய்யப்பட்ட கிளையினையோ கொண்டிருத்தல் வேண்டும்.
3. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள சேவையாளர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் இத்திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே - 021-222-0824)
4. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இத் திணைக்களத்தில் கிடைக்கும் விண்ணப்ப படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மீளளிக்கமுடியாத பெறுகைக்கட்டணமாக உலர் உணவுக்கு ரூபா 3000.00 ,சமைத்த உணவுக்கு ரூபா 1000.00 காசாக செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 03.10.2025 தொடக்கம் 16.10.2025 வரையான காலப்பகுதியில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
5. விலைக் கேள்வித்தாரர்களிற்கான முன் பெறுகைக் கூட்டம் (Pre-Bid Meeting) ஆனது 10.10.2025 ம் திகதி காலை 11.00 மணிக்கு மாகாண சுதேசமருத்துவ திணைக்களத்தில் நடைபெறும்.
6. விலைக்கேள்விகள் **17.10.2025** திகதி காலை 10:30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக இத்திணைக்களத்தின் **கணக்காளரின் அறையில் உள்ள பெறுகைப்பெட்டியினுள் இடல்** வேண்டும் **விலைக்கேள்விகள் அனைத்தும் உடனடியாகவே திறக்கப்படும்.**
7. **"சேவையின் விபரம் .........., பெறுகைஇல.........."** போன்ற விபரம் கடித உறையின் மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத. விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படாமல் திருப்பியனுப்பப்படும்.
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்துவிடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
**மாகாண திணைக்கள பெறுகைகள் குழு**
**வடமாகாண சுதேசமருத்துவ திணைக்களம்,**
**இல.572/3,ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி : 021-222-0824 தொலைநகல் : 021-222-0822**


# கற்றல் செயல்முறையில் தண்டனை உகந்ததல்ல!

## அமைச்சர் விளக்கம்

கொழும்பு,ஒக்.4
தண்டனை என்பது கற்றல் செயல்முறையின் ஒரு பகுதியாக இல்லை. தண்டனை பயனுள்ள கல்வியுடன் பொருந்தாது என்று சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக பிரதியமைச்சர் மருத்துவர் ஹன்சக விஜயமுனி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வி என்பது உலகைப் புரிந்துகொள்வதும் மனித மூளையை அறிவியல் ரீதியாக வடிவமைப்பதும் ஆகும்.

குழந்தைகள் பெரும்பாலும் ஆசிரியரைவிட ஆக்கபூர்வமாக அணுகுகிறார்கள், தண்டனை கல்விக்கு அடிப்படையானது அல்ல.

ஆசிரியர்கள் தங்களைப் பாடத்திட்டங்களுக்குள் மட்டுப்படுத்தாமல், முடிந்தவரை குழந்தைகளின் படைப்பாற்றலை வளர்த்து மேம்படுத்தவேண்டும் - என்றார்.

(ச-இ)


## வீடு வாடகைக்கு தேவை

இரண்டு அங்கத்தவர்கள் கொண்ட அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பத்திற்கு யாழ் மாநகர சபை எல்லைக்குற்பட்ட பகுதியில் நல்ல சூழலில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு தேவை

(CS 30620) E

தொடர்புகளுக்கு:
077 923 7714

## வேலையாள் தேவை

சாரதி அனுமதிப்பத்திரத்துடன்
A/C வேலை தெரிந்த
அனுபவமுள்ளவர்கள் தேவை

(CS/59553) J-1

தொடர்புகளுக்கு:
076 383 6657

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

**விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்**

எமது சங்கத்தின் வைரவிழாவினை முன்னிட்டு விசேடபொதுக்கூட்டம் எதிர்வரும் 05.10.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் சங்கப்பணிமனையில் நடைபெறவுள்ளது. **அங்கத்தவர்கள் அனைவரும் நேரத்திற்கு வருகை தந்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.**

**இணைச் செயலாளர்**

(CS 59667) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மாங்குளம் மகாவித்தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றன. கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து இடம்பெற்ற மதியபோசனத்துக்கான பங்களிப்பை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் சிற்றூழியர்களும், பரிசுப்பொருள்களுக்கான நிதிப்பங்களிப்பினை சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த தயாளந்தன் மற்றும் சட்டத்தரணி வி.எஸ். தனஞ்சயன் ஆகியோரும் வழங்கியிருந்தனர். (ச-25,20)

# தீர்வை வழங்காதுவிடின் திங்கள் முதல் போராட்டம்

*மின்சாரசபைத் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை*

**கொழும்பு,ஒக்.4**

**24 கோரிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு மின்சாரசபை தொழிற்சங்கங்கள் ஆரம்பித்துள்ள சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்துக்கு, அரசாங்கத்திடமிருந்து முறையான தீர்வு கிடைக்காவிட்டால் திங்கட்கிழமை முதல் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக மின்சாரசபை தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.**

இதுதொடர்பில் மின்சாரபை பொறியியலாளர் சங்கங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் சதருவன் மங்ஷநாயக்க தெரிவிக்கையில், இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்புத் தொடர்பில் ஆங்கில மொழியில் எமக்குக் கடிதம் கிடைத்துள்ளது. அதில் எமது பெயர், எண் தெரிவிக்கப்பட்டு, நீங்கள் இந்த நிறுவனத்துக்கு இணைக்கப்படுகிறீர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருநபர் நிறுவனம் ஒன்றுக்கு இணைக்கப்படும் போது, அடிப்படைச்சம்பளம், பதவிநிலை, தொழில் தன்மை, பதவி உயர்வுகள் போன்ற விடயங்களைத் தெரிந்திருப்பது கட்டாயம். அது தொடர்பான எந்த ஆவணமும் இதுவரை எங்களுக்குக் கிடைக்கவில்லை. மின்சார சபையின் மாதாந்த வருமானம் சுமார் 40 - 50 மில்லியன் ரூபா வரை உள்ளது. இவ்வாறான நிறுவனத்தை மறுசீரமைப்பு செய்யும் போது, அந்த நிறுவனத்தின் அமைப்புத் தொடர்பில் தீவிரமாகக் கலந்துரையாடி இருக்கவேண்டும். எமது தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்தாது விடில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தொழிற்சங்கப் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவோம்- என்றார். (க-இ)

# மருந்துத் தட்டுப்பாட்டுக்கு இரு மாதங்களில் தீர்வு!

கொழும்பு, ஒக். 4

நாட்டில் நிலவும் மருந்துகள் பற்றாக்குறை இன்னும் ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்குள் தீர்க்கப் படும். தற்போதைய மருந்துகள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பல்வேறு தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள் என. மருந்து விநியோகப்பிரிவால் வழங்கப்படாத மருந்துகளைத் தனியாரிடமிருந்து கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கண்டி தேசிய மருத்துவமனையின் 'சுவ பியச' புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுத் திறப்புவிழாவில் அவர் இதனைத் தெரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அரிசி, மா போன்ற பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் உடனடியாக கேள்வி மனுக்களைக் கோரி இரண்டு மூன்று வாரங்களில் அதனைப் பெற்றுக்கொள்ளமுடியும். ஆனால் மருந்துப் பொருள்களுக்கு அவ்வாறு செய்யமுடியாது.

மருந்துக்கான விலைமனு கோரப்பட்ட பின்புதான் அந்த நிறுவனங்கள் அவற்றை உற்பத்தி செய்ய ஆரம்பிக்கும். எனவே சில மருந்துகளுக்கு கேள்வி மனுக் கோரி, அதனைப் பரிசீலித்து, குறிப்பிட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பின்னர்தான் அவர்கள் அதனைத் தயாரித்துப் பொதி செய்து அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பார்கள். சில நேரங்களில் ஒரு வருடகாலமும் செல்வதுண்டு. எனவே எதிர்காலத்தில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படாதிருக்க இப்போதிருந்தே நடவடிக்கை எடுக்கப் பட்டுவருகின்றது - என்றார். (க-இ)


# மரண அறிவித்தல்

தோற்றம்
27 . 11 . 1931



மறைவு
27 . 09 . 2025

## பரிபூரணம் பத்மநாதன்

**(ஓய்வு பெற்ற ஆசிரியர், Good Shepherd Convent (Colombo) School)**

சங்குவேலியை பிறப்பிடமாகவும், கொழும்பு, London, சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் பரிபூரணம் அவர்கள் கடந்த (27.09.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், அன்னம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவபாலச்சந்திரன் (Canada), சிவயோகராஜா (London), சிவயோகேஸ்வரி, ஜீவமலர் காலஞ்சென்றவர்களான ஜெயமலர், சிவதாசன், சுகந்திமலர் ஆகியோரின் சிறியதாயாரும், தேவராணி (Canada), சாரதாதேவி (London), சிவநாதன், வரதராசலிங்கம், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் தயாறூபி (Canada), கமலநாதன் (London) ஆகியோரின் அன்பு மாமியாரும், தயாபரன் - ஜீவறேகா, றமேஷன் - வளுஜிகா, வளுஜன் - றஜிதி (Swiss), சாந்தகுமார் - ஜெறுசி, சாளுகன் (Swiss), சீருதன் (Canada), தர்ஷன் - சுவேதா (Australia), நிஷாந்தன் - ரேவதி (London), குகசூரியர் - சிவனுஜா, கீகன்லியன் - கம்ஷானி (London), சிந்துஜா (Canada), நிகேதன் (Canada), கௌசிகன் (London) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அபரஜிதா, அனுஜிதா, நிஷாரா, ஜிவின், லியா, சஜெறா, சஞ்ஞெனு, சிவசூரியர், சிவஸ்திகா, விகான், ராகி, ஷியானா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சங்குவேலி தெற்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**



## தென்னங்காணி விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில்
19 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்.
விலை பேசி தீர்மானிக்கலாம்

**தொடர்புகளுக்கு: 077 327 6500**



**அளவெட்டி வடக்கு**

## தவளக்கிரி முத்துமாரி அம்மன்

**தேவஸ்தானம்**

## பொதுக்கூட்டம் (2024 , 2025)

அளவெட்டி வடக்குத் தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய உபயகாரர் பொதுச்சபைக் கூட்டமானது எதிர்வரும் 19.10.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய பிரதான மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அனைத்து ஆலய உபயகாரர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.

**செயலாளர்**
**தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலயம்**
**நிர்வாக சபை அளவெட்டி வடக்கு.**

(CR) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்...

மீட்கப்பட்டுள்ளார். திருவையாறு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் பேரம்பலம் பரந்தாமன் (வயது-47) என்ற ஆசிரியரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இந்த விடயம் தொடர்பில், கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

## காதல்...

25 வயதுடைய இளைஞர் ஒருவர் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டான் பொலிஸாரின் விசாரணைகளில் காதல் விவகாரம் காரணமாகவே, அந்த இளைஞர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. இதையடுத்து, ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த யுவதி ஒருவரும், அவருடைய சகோதரனும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ம-19)

## பொலிஸாரின்...

யில், பொலிஸார் அடித்துத் துன்புறுத்தியதாலேயே தனது மகன் உயிரிழந்துள்ளார் என்று இளைஞரின் தாயார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் கபிலன் (வயது-34) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

பேசாலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டாஸ்பத்திரிப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை போதைப்பொருளுடன் தொடர்புடைய சந்தேகத்தின்பேரின் அந்த இளைஞர் கைது செய்யப்பட்டார். அவருடன் நின்ற மற்றைய இளைஞர் தப்பியோடிய நிலையில், கைது செய்யப்பட்ட நபரை பொலிஸார் தடுப்புக் காவலில் வைத்து விசாரித்தனர்.

இந்த நிலையில், நேற்று காலை பொலிஸ் நிலைய விசாரணைக்கூண்டில் அவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார். இதையடுத்து சடலம் பேசாலை பிரதேச மருத்துவமனைக்கு நேற்றுக் காலை கொண்டுசெல்லப்பட்டது. மன்னார் நீதிமன்ற பதில் நீதிவான் ஜெபநேசன் லோகு பேசாலை பிரதேச மருத்துவமனைக்கு நேற்று நண்பகல் சென்று விசாரணைகளை முன்னெடுத்தார். இதையடுத்து பொலிஸார் அடித்துத் துன்புறுத்தியதாலேயே தனது மகன் உயிரிழந்துள்ளார் என்று இளைஞரின் தாயார் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்த விடயத்தில் நீதியான விசாரணைகளையும் அவர் கோரியுள்ளார். (அ-ம-56)

## குறிகாட்டுவான்...

செலவில், காலை 9 மணியளவில் இந்தப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. 2026ஆம் ஆண்டு ஜுலை மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் இந்தப் பணிகளை நிறைவுக்குக் கொண்டுவருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பல தரப்பட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-ம-26-66-20-100)

## வெடிக்காத...

உரிமையாளர் தனது காணியைத் துப்புரவு செய்தபோதே மேற்படி குண்டுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து, இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவைப் பெற்று குண்டுகளை மீட்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-27)

## திலீபனின்...

காலமாக தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் தொடர்பில் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டு வருகின்றன. மிகவும் வருத்தத்துக்கு உரிய இந்த விடயம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் கவனம் செலுத்தியுள்ளனர். தியாகதீபம் திலீபனுக்கு உதவியாகவும் அவருக்குப் பின்னர் யாழ்ப்பாணம் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளராகவும் இருந்த ராஜன் உள்ளிட்ட மூத்த போராளிகள் பலரும் என்னைத் தொடர்பு கொண்டு, திலீபனை அஞ்சலிப்பதற்கு அரசியல் கலப்பற்ற பொறிமுறையொன்றை உருவாக்குமாறு வலியுறுத்தியுள்ளனர். எனவே, அந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம்.

1988ஆம் ஆண்டு என்னுடைய செலவிலேயே தியாக தீபம் திலீபனுக்கான தூபி 'தியாகதீப தூபி' என்ற பெயரில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. அந்தத் தூபி ஏழு வருடங்களுக்குப் பின்னர் 1995ஆம் ஆண்டு உடைக்கப்பட்டது.

அதன் காரணமாக நான் சுடப்பட்டு, வேலை இழந்து இந்தியாவுக்குத் தப்பியோட வேண்டிய நிலை ஏற்பட்டது. தற்போது தீபங்களுக்கு முன்பாக தலை குனிந்து நிற்பவர்கள் தம்மைத் தியாகிகளாக நினைக்கின்றனர். இதில் யார் யார் இராணுவ புலனாய்வுடன் தொடர்புடையவர்கள் என்பது எனக்குத் தெரியும்.

அதன் பின்னர் 2003ஆம் ஆண்டு தூபி திறந்து வைக்கப்பட்ட நிலையில், போர் நிறைவடைந்த பின்னர் 2010ஆம் ஆண்டு மீண்டும் உடைக்கப்பட்டது. வடமாகாணசபை இயங்கு நிலையில் இருந்தபோது நாங்கள் தூபியை மீண்டும் திறந்து வைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டோம். எனினும், எமது நடவடிக்கைகள் சாத்தியப்படவில்லை.

2016ஆம் ஆண்டு தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தை துப்புரவாக்கி நினைவேந்தலை செய்யுமாறு ஜனநாயகப் போராளிகள் கட்சியை நான் வலியுறுத்தினேன். அதன்படி அது நடந்தது. 2017ஆம் ஆண்டில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸும் இணைந்துகொண்டது. 2018ஆம் ஆண்டில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் நினைவிடத்தில் கூடாரங்கள் அமைத்து ஆதிக்கம் செலுத்திய போது அதைக்கேட்க நாங்கள் சென்ற விடத்தில் ஏளனமான நடத்தப்பட்டோம். தற்போது உள்ளவர்கள் வரலாற்றைத் திரிபுபடுத்தக் கூடாது. திலீபன், எல்லாருக்கும் பொதுவானவன். அவன் கௌரவிக்கப்பட வேண்டியவன். மதிப்பளிக்கப்பட வேண்டியவன். போட்டி பொறாமையால் நினைவேந்தலைக் கொச்சைப்படுத்தக் கூடாது.

எனவே, திலீபனை அஞ்சலிப்பதற்காக பொருத்தமான அரசியல் கலப்பற்ற கட்டமைப்பை உருவாக்க வேண்டும். ஐந்து அல்லது ஏழு பேரைக் கொண்ட நினைவேந்தலுக்கான கட்டமைப்பை உருவாக்கி தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை செய்ய வேண்டும். இதற்கு மக்கள் தமது ஏகோபித்த ஆதரவை வழங்கவேண்டும் - என்றார். (அ-ம-26)

## 50 லட்சம்...

யாழ்ப்பாணம் - நல்லூர்ப் பகுதியில் உள்ள வீடொன்றில் 50 இலட்சம் ரூபா பெறுமதியுடைய வெளிநாட்டுப் பணமும், நகைகளும் அண்மையில் திருடப்பட்ட நிலையில், இந்தக் குற்றத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள வீடொன்று, இரவுவேளையில் உடைக்கப்பட்டு பெருந்தொகை வெளிநாட்டுப் பணமும் நகையும் திருடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி கலும்பண்டார தலைமையிலான குழுவினர், நேற்றைய தினம் பிரதான சந்தேகநபரைக் கைது செய்ததுடன், அவரிடம் இருந்து பெருமளவு நகைகளையும், வெளிநாட்டு நாணயங்களையும் மீட்டுள்ளனர். சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன், அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-26)

## இலங்கையின்...

உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் கடந்த 8ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இந்தக் கூட்டத் தொடரில் பிரிட்டனால் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணை முன்வைக்கப்பட்டது. அதில், 'இனப்பிரச்சினை' எனும் சொல்லுக்குப் பதிலாக 'மோதல்' எனும் பதம் மாற்றப்பட்டுள்ளது.

இந்த மாற்றம் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே, இலங்கையினதும், இலங்கைக்கு ஆதரவான ஏனைய சில நாடுகளின் கோரிக்கைக்கு அமையவே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று பிரிட்டன் கூறியுள்ளது. சொற்களில் மாற்றங்கள் செய்யப்பட்டாலும், அதுசார்ந்து நிற்கும் பொருளில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் பிரிட்டன் விளக்கமளித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதரகம் மற்றும் ஜெனிவாவில் உள்ள பிரித்தானிய பிரதிநிதிகளிடம் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் கேட்டறிந்துள்ளார். இதன்போது, பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்கனவே வெகுவாக அதிருப்தியடைந்திருக்கும் பின்னணியில், பிரேரணையில் உள்வாங்கப்பட்டிருக்கும் சொற்களும் இவ்வாறு நீர்த்துப்போனால், அது அந்த மக்களின் நம்பிக்கையிழப்புக்கே வழிவகுக்கும் என்றும் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் புதிய பிரேரணை நாளைமறுதினம் வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

## நிறைவேற்று...

விஜயதாஸ ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை தற்போது நீக்க வேண்டாம் என அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். ஏனெனில் நிறைவேற்று அதிகாரத்துக்கு உரிய தேவை இலங்கையில் உள்ளது. அந்த அதிகாரம் இல்லாவிடில் அரசாங்கத்தின் இருப்பு ஆட்டம் கண்டுவிடும்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டு இது தொடர்பில் மறுபரிசீலனையில் ஈடுபடலாம் - என்றார். (அ-ம-44)

## ஆசிரியரால்...

தாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான முறைப்பாடொன்று பதிவானதை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் உறுதிப்படுத்தியுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26)

## மாகாணத்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் கடந்த 11 வருடங்களாக மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் உள்ளது. மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாமல், ஆளுநர்களின் அதிகாரங்களின் கீழ்தான் மகாணசபைகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நிர்வாகங்கள் ஆளுநர்களின் அதிகாரங்களின் கீழ் இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு, அவர்களின் நலன்களுக்காகவே மாகாணசபைகள் கொண்டுவரப்பட்டன.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, அரசியலமைப்புமுறு சீரமைப்பு ஊடாக தேர்தலை நடத்த முடியும். இவ்வருடத்துக்குள் அதனை நடத்துமாறு கோரிக்கை விடுக்கின்றோம் - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எலான் மஸ்க் சொத்து; 500 பில்லியன் டொலர்!

டெஸ்லா கார் நிறுவனம் மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் விண்வெளி ஆய்வு நிறுவனம் உள்ளிட்ட தொழில் நிறுவனங்களை நடத்திவரும் உலகக் கோடீஸ்வரரான எலான் மஸ்க்கின் சொத்துமதிப்பு 500 பில்லியன் டொலர்களைக் கடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது வணிக நிறுவனங்களின் சந்தை மதிப்புகள் உயர்ந்து வந்தநிலையில், அவரது சொத்து மதிப்பு அசுர வளர்ச்சி கண்டுள்ளது.

உலகின் பணக்காரர்கள் வரிசையில் அவரை எட்டிப்பிடிக்க முடியாத முன்னிலையில் அவர் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதே வேகத்தில் அவரது சொத்து மதிப்புகள் உயர்ந்தால் அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் தனிநபரின் சொத்து மதிப்பு 1000 பில்லியனை எட்டி உலகின் முதல் டிரில்லியனராக அவர் இடம் பிடிப்பார் என்று கணிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வங்கிக்கிளை திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஒக்.4

எச்.என்.பி. முதலீட்டு வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் திறப்புவிழா எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் திண்ணையில் இடம்பெறவுள்ளது. (ச-41)

## ரூபா உயர்வு

யாழ்ப்பாணம், ஒக்.4

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று சற்று உயர்ந்துள்ளது. இலங்கை மத்திய வங்கி இன்று வெளியிட்டுள்ள நாணயமாற்று வீதத்தின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 298 ரூபா 77 சதமாகவும் விற்பனைப் பெறுமதி 306 ரூபாய் 27 சதமாகவும் பதிவாகியுள்ளது. ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 401 ரூபா 53 சதமாகவும், விற்பனைப் பெறுமதி 414 ரூபாய் 17 சதமாகவும். யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 349 ரூபா 35 சதம், விற்பனை பெறுமதி 360 ரூபாய் 89 சதமாகவும் ஆக பதிவாகியுள்ளது. (ச-இ)



## துர்க்காதேவி ஆலயத்தில் வியாக்கிராசுரவதம் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.4

விஜயதசமித் திருநாளான நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை இரவு மாவிட்டபுரம் கந்தப்பெருமான் இரட்டைக் குதிரை வாகனத்தில் ஊர்வலமாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்துக்கு எழுந்தருளினார். தொடர்ந்து துர்க்காதேவி ஆலய முன்றலில் கிரியை வழிபாடுகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து 'வியாக்கிராசுரவதம்' எனும் சிறப்பு நிகழ்வு இடம்பெற்றது. (ச-25,66)

## மகாசமாதி குருபூஜை

யாழ்ப்பாணம், ஒக்.4

ஸ்ரீலஸ்ரீ மலர் அம்மையாரின் 15ஆவது குருபூஜை தின நிகழ்வு உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் நாளை ஞாயிறுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அம்மையாரின் குருநாதர் ஸ்ரீலஸ்ரீ மௌன குரு சுவாமிகளின் 46ஆவது குருபூஜை தினம் மறுவன்புலவு சமாதி இல்லத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயத்தில் சிறுவர்தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்றன. (ச-25,9)



காணி விற்பனைக்கு
நாவற்குளி புகையிரத நிலையத்திலிருந்து
100m தூரத்தில் 2 பரப்புடைய
2 காணிகள் விற்பனைக்கு உண்டு
(CS/59569) E
தொடர்பு: 076 330 9761

# மன்னார் காற்றாலை சர்ச்சை பேச்சுமூலம் தீர்க்கவேண்டும்

## தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்து

கொழும்பு, ஒக்.4

மன்னார் காற்றாலைத் திட்டம் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் குழப்பநிலைக்குப் படைப்பலத்தைப் பயன்படுத்தாது பேச்சுகள்மூலம் தீர்வுகாண்பதில் அரசாங்கம் நாட்டம் செலுத்தவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேசிய சமாதானப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தீவில் மின்சார உற்பத்திக்கான காற்றாலைகளை நிறுவுவது தொடர்பாக நீண்டநாள் களாக நிலவிவரும் சர்ச்சை மக்களின் ஆர்ப்பாட்டம் மற்றும் பொது முடக்கல் போராட்டத்தை அடுத்து தீவிரமடைந்திருக்கிறது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் பலவந்தமாக அப்புறப்படுத்தியதை அடுத்து ஏற்பட்டிருக்கும் இந்த நிலைமை தொடர்பாக தேசிய சமாதானப் பேரவை அதன் கவலையை வெளிப்படுத்துகின்றது. பொலிஸார் மேற்கொண்ட இந்த நடவடிக்கை பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகளை மேலும் முரண்பாடுகளை அதிகரிக்க வழிவகுக்கின்றது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக ஆராயும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 80ஆவது வருடாந்த கூட்டத் தொடரில் ஜனாதிபதி கலந்து கொண்டிருந்தபோது மன்னாரில் பொலிஸார் இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டது கவலைக்குரியது. நாடு திரும்பிய ஜனாதிபதி இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, முன்னர் உறுதியளித்ததன் பிரகாரம் பேச்சுவார்த்தையின் ஊடாக பரஸ்பரம் ஏற்புடைய தீர்வொன்றைக் காண்பதில் நாட்டம் காட்ட வேண்டும் - என்றுள்ளது. (எ-இ)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் நாவற்குழி அமரா வீதியில் 24 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.
- இருவழிப் பாதையுடன்
- A9 வீதியிலிருந்து 150m தூரம்
- அமரா வீதி முகப்புடன்
- 1 பரப்பின் விலை 10 லட்சம்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழி சந்தி 400m தூரம்.
- நாவற்குழி சிவன்கோவில் 300m தூரம்.
- நன்னீர் ஊற்று, நல்ல சூழல்
(CS/59572) J-1
தொடர்புகளுக்கு:-
076 860 2770, 076 987 8617

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 04.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.